Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 27.2.2026 / Script

**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : மலர்விழி**

**தேதி : 27.02.2026 – வெள்ளிக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி**

---

***தலைப்புச் செய்திகள்***

தொழில் நுட்பங்களின் அடிப்படையிலான நிர்வாகம் போன்ற அரசின் பல்வேறு நடவடிக்கைகளால், தற்போது நாடே, **சீர்திருத்த எக்ஸ்பிரசில்** பயணித்து வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

AI தொழில் நுட்பங்களின் பாதுகாப்பு, மற்றும் **நன்னெறி அடிப்படைகள்** குறித்து, அனைத்துத் தரப்பினர் இடையே **நம்பிக்கை** முக்கியம் என்று, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தமிழக **சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு,** பீகாரை விட அதிகமாக சாதனை அளவில் அமையும் என்று, **தலைமைத் தேர்தல் ஆணையர்** திரு. கியானேஷ் குமார் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், **நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி** மூலம் வாங்கப் பட்டுள்ள, 2 ஆம்புலன்ஸ் வாகனங்களை, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வைத்திலிங்கம், சுகாதாரத் துறையிடம் வழங்கினார்.

***மோடி வெபினார் -1 (10)***

தொழில் நுட்பங்களின் அடிப்படையிலான நிர்வாகம், வர்த்தகம் புரிவதை எளிமையாக்குவதற்கான நடைமுறைகள் போன்ற அரசின் பல்வேறு நடவடிக்கைகளால், தற்போது நாடே, சீர்திருத்த எக்ஸ்பிரசில் பயணித்து வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். முன்னேறிய இந்தியாவை உருவாக்குவதற்கான **நிதி, தொழில்நுட்பம் மற்றும் சீர்திருத்தங்கள்** குறித்து, இணைய வழியில் இன்று நடைபெற்ற **பட்ஜெட்டிற்கு பிந்தைய பயிலரங்கில்** அவர் பேசுகையில், சீர்திருத்த எக்ஸ்பிரசின் வேகத்தை பராமரிக்க

கொள்கை நோக்கங்களுக்கு அப்பாற்பட்டு, கொள்கையின் விளைவுகளிலும், சிறப்பு கவனம் தேவை என்றார். பிரதமர் உரையில் இடம் பெற்ற மேலும் சில அம்சங்கள்…

***மோடி வெபினார் - 2 (12)***

சாலை முதல் டிஜிட்டல் வரை, நாடு முழுவதும் பொது உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில், அரசு கடந்த 10 ஆண்டுகளாக, முக்கிய கவனம் செலுத்தி வரும் நிலையில், செயற்கை நுண்ணறிவு, பிளாக் செயின், டேடா பகுப்பாய்வு போன்ற நவீன தொழில்நுட்பங்களின் பயன்பாட்டில், வேகம், பொறுப்புணர்வு மற்றும் வெளிப்படைத் தன்மையை அதிகரிக்க வேண்டியது மிக அவசியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார். இதனால், வரவிருக்கும் காலங்களில், நாட்டின் செயல் திறன் பல மடங்கு மேம்படும் என்றும் அவர் கூறினார்.

மத்திய அரசின் பட்ஜெட் என்பது எதிர்காலத்திற்கான **செயல்திட்ட கொள்கையே** தவிர, குறுகிய காலத் தேவைகளுக்கான **வர்த்தக ஆவணம்** அல்ல என்றும், இந்த உண்மையின் அடிப்படையில்தான், பட்ஜெட்டின் வெற்றியை மதிப்பிட வேண்டும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

***மோடி – பயணம் (17)***

பிரதமர் திரு. நரேந்திர மோடி நாளை ராஜஸ்தான் மற்றும் குஜராத்திற்கு பயணம் மேற்கொள்கிறார். இப்பயணத்தின்போது, ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை அவர் தொடக்கி வைத்து, வேறு பல திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுவார். நகர்ப்புற வளர்ச்சி, குடிநீர் விநியோகம், மின்சாரம், நீர் பாசனம், தொழிற் கட்டமைப்பு போன்ற பல்வேறு துறைகள் தொடர்பான இத்திட்டங்களின் மொத்த மதிப்பு, 16 ஆயிரத்து 680 கோடி ரூபாயாகும். பெண்களுக்கு ஏற்படும் கர்பப் பை வாய்ப் புற்றுநோய்க்கு எதிராக, 14 வயதான சிறுமிகள் அனைவருக்கும் HPV தடுப்பூசி போடுவதற்கான தேசிய திட்டத்தை, அஜ்மீரில் பிரதமர் தொடக்கி வைக்கிறார். ராஜஸ்தான் அரசின் பல்வேறு துறைகளுக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள, 21 ஆயிரத்து 800 பேருக்கு நியமனக் கடிதங்களை அவர் வழங்குகிறார். தொடர்ந்து நாளை பிற்பகல் பிரதமர், குஜராத் மாநிலம் சனந்த் பகுதியில், மைக்ரான்

இண்டியா நிறுவனத்தின், செமி கண்டக்டர் உற்பத்தி ஆலையை தொடக்கி வைக்கிறார். 22 ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் நிறுவப் பட்டுள்ள இந்த அதி நவீன செமி கண்டக்டர் உற்பத்தி ஆலை, உலகச் சந்தையின் தேவைகளை பூர்த்தி செய்வதாக அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

***முர்மு பயணம் (11)***

குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, இன்று, ராஜஸ்தானில் உள்ள ஜெய்சல்மேர் விமானப்படை தளத்தில் இருந்து, முற்றிலும் உள்நாட்டிலேயே தயாரிக்கப் பட்ட, போர்த் தேவைகளுக்கான **பிரச்சண்ட்** – இலகுரக ஹெலிகாப்டரில், பயணம் மேற்கொண்டார். அனுபவம் மிகுந்த விமானப்படை பைலட்டுகள், ஹெலிகாப்டரை இயக்கி, அதன் சிறப்பு அம்சங்களை செயல் விளக்கம் செய்து காட்டினர். முன்னதாக, விமானப்படை அதிகாரிகளும், பிரச்சண்ட் ரக ஹெலிகாப்டரின் செயல்திறன் குறித்து, குடியரசு தலைவரிடம் எடுத்துக் கூறினர். உயரமான மலைப் பகுதிகளிலும், சிறப்பாக செயல்படும் வகையில், வடிவமைக்கப் பட்டுள்ள இந்த ஹெலிகாப்டரால், இந்திய விமானப் படையின் போர்த் திறன், கணிசமாக அதிகரித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

***வைஷ்ணவ் (16)***

செயற்கை நுண்ணறிவு துறையில், புதிய தொழில் நுட்பங்களின் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் நன்னெறி அடிப்படைகள் குறித்து, பயனர்கள் உட்பட அனைத்துத் தரப்பினர் இடையே நம்பிக்கை மிக முக்கியம் என்று, மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார். ஊடக நிறுவனம் ஒன்றின் சார்பில், புதுடெல்லியில் இன்று நடைபெற்ற, எழுச்சிமிகு இந்தியா உச்சி மாநாட்டில் அவர் பேசுகையில், செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பத்திற்கு மாறுவதை அனைவரும் மிகத் தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், பிரச்சனைகளை முன்கூட்டியே கண்டறிந்து தடுக்கும் வகையில், நமது நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்றும் கூறினார். AI துறைக்குத் தேவையான மனித வளத்தை திறம்பட்ட முறையில் உருவாக்குவதில், அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருவதாக அமைச்சர் தெரிவித்தார். இதன் ஒரு பகுதியாகவே, IT நிறுவனங்களுடன் இணைந்து, இளைஞர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம், 4 ஆண்டுகளுக்கு முன்பே தொடக்கப் பட்டதாக அவர் கூறினார். AI

திறன் மேம்பாட்டு முயற்சிகளில், மாநில அரசுகளும் பங்களித்தல் அவசியம் என அவர் மேலும் வலியுறுத்தி உள்ளார்.

***கெஜ்ரிவால் பிஜேபி (9)***

டெல்லி அரசின் கலால் துறை கொள்கை தொடர்பான வழக்கில், கீழ் நீதிமன்றத்தால், திரு. அரவிந்த் கெஜ்ரிவால் விடுவிக்கப் பட்டதற்கு, சாட்சியங்களின் பற்றாக்குறைதான் காரணம் என்றும், ஊழல்கள் சம்பந்தப்பட்ட நூற்றுக்கணக்கான கை பேசிகள் மற்றும் சிம் கார்டுகள் அழிக்கப் பட்டதே உண்மை என்றும், பிஜேபி கூறியுள்ளது. பிஜேபி செய்தித் தொடர்பாளர் திரு. சுதான்ஷூ திரிவேதி இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு கூறினார். ஆயினும், டெல்லி முன்னாள் முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால், செய்தியாளர்களிடம் பேசுகையில், தாம் நேர்மையாளர் என்றும், வழக்கில் உண்மை வென்றுள்ளதாகவும் கூறினார்.

***தேர்தல் ஆணையர் -1 (13)***

தமிழகத்தில் ஒவ்வொரு சட்டமன்றத் தேர்தலின்போதும், அதிக அளவிலேயே வாக்குகள் பதிவாகி இருப்பதாகவும், இம்முறையும் தமிழக சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு பீகாரை விட அதிகமாக சாதனை அளவிலேயே அமையும் என்றும் தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. கியானேஷ் குமார் கூறியுள்ளார். இன்று, சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்முறை 18 முதல் 30 வயது வரை உள்ள இளம் வாக்காளர்கள் பெரும் எண்ணிக்கையில் தேர்தல் திருவிழாவில் பங்கேற்பதை உறுதிப்படுத்த, கூடுதல் முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றார். தமிழகத்தில் ஆண் வாக்காளர்களை விட, பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகம் என்று, தலைமைத் தேர்தல் ஆணையர் தெரிவித்தார். நலிவடைந்த பிரிவினர் வாக்களிக்க, வாக்குப் பதிவு மையங்களில் போதிய வசதிகள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். தலைமைத் தேர்தல் ஆணையரின் பேட்டி குறித்து கூடுதல் விவரங்கள்…

***தேர்தல் ஆணையர் – 2 (16)***

தமிழக அரசியல் கட்சிகளுடன் தேர்தல் ஆணையம் நடத்திய ஆலோசனைக் கூட்டங்களில், சட்டமன்றத் தேர்தலை ஒரே கட்டத்தில் நடத்தி முடிக்க, ஆலோசனை வெளியாகி இருப்பதாகவும், அரசியல் கட்சிகளின்

ஆலோசனைகளை ஆணையம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளும் என்றும், திரு. கியானேஷ் குமார் கூறினார். தேர்தல் ஆணையத்தின் இணைய தளத்தில், வேட்பு மனு தாக்கலுக்கு வசதிகள் உள்ள போதிலும், சட்ட விதிமுறைகளின் படி, வேட்பு மனுக்கள் நேரடியாகவே பெற்றுக் கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

SIR நடைமுறைகள் குறித்து, தலைமைத் தேர்தல் ஆணையர் பேசுகையில், பீகாரில் இந்நடைமுறைகள் பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளதாகவும், இறந்துபோன வாக்காளர்கள் மற்றும் புலம் பெயர்ந்த வாக்காளர்களின் பெயர்களை நீக்கி, பிழையற்ற வாக்காளர் பட்டியலை தயாரிக்க, அடிப்படையான இந்நடைமுறை அவசியம் என்றும் கூறினார். முன்னதாக, முதல் முறை வாக்களிக்க தகுதி பெற்றுள்ள இளம் வாக்காளர்களையும், மாற்றுத் திறனாளி வாக்காளர்களின் பிரதிநிதி ஒருவரையும், தலைமைத் தேர்தல் ஆணையர் பாராட்டி கவுரவித்தார்.

***புதுச்சேரி – வைத்திலிங்கம் (11)***

புதுச்சேரியில், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மூலம், 25.32 லட்சம் ரூபாய் செலவில் வாங்கப் பட்டுள்ள, 2 ஆம்புலன்ஸ் வாகனங்களை, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வைத்திலிங்கம், இன்று, சுகாதாரத் துறையிடம் வழங்கினார். சுகாதாரத் துறை இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் செவ்வேள், துணை இயக்குநர்கள் உட்பட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். கிராமப் புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில், சிகிச்சைக்கு வரும் நோயாளிகளில் மேல் சிகிச்சை தேவைப் படுபவர்களை, புதுச்சேரி அரசுப் பொது மருத்துவமனை, ஜிப்மர் உள்ளிட்ட மருத்துவமனைகளுக்கு அழைத்து வர, புதிய ஆம்புலன்ஸ் வண்டிகள் உதவிகரமாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

***ஓ.பி.எஸ் (6)***

தமிழகத்தில், முன்னாள் முதலமைச்சரும், அஇஅதிமுக ஒருங்கிணைப்பாளருமான திரு. ஓ. பன்னீர் செல்வம், தமது மகனும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. ரவீந்திரநாத் உடன் இணைந்து, இன்று, திமுக-வில் சேர்ந்துள்ளார். சென்னையில் உள்ள திமுக அலுவலகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியின்போது, ஓ.பி.எஸ் ஆதரவாளர்கள் பலரும், திமுக-வில் இணைந்தனர்.

***வானிலை (10)***

இன்று, தென் தமிழகம், மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்கள், மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்றும், தமிழகத்தின் இதர பகுதிகள் மற்றும் புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், வறண்ட வானிலை நிலவும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வரும் 1ஆம் தேதி வரை, தமிழகத்தின் கடலோரப் பகுதிகளில், அதிகாலை வேளையில், லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் அதிகபட்சமாக, தென்காசி மாவட்டம் ஆயிக்குடியில் 7 செ.மீ மழை பதிவாகி உள்ளது. உதகமண்டலத்தில், 9 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

***ஆடவர் கிரிக்கெட் (10)***

உலக க் கோப்பைக்கான ICC ஆடவர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், இன்று மாலை நடைபெறும் சூப்பர் – 8 போட்டியில், இங்கிலாந்து – நியூசிலாந்து அணிகள் மோத உள்ளன. நேற்று இரவு சென்னையில் நடைபெற்ற சூப்பர் – 8 போட்டியில், இந்திய அணி, 72 ரன் வித்தியாசத்தில், ஜிம்பாப்வே அணிக்கு எதிராக வெற்றி பெற்றது. இந்திய அணி, வரும் ஞாயிற்றுக் கிழமை கொல்கத்தாவில், தனது கடைசி சூப்பர் – 8 போட்டியில், வெஸ்ட் இண்டீஸ் அணியுடன் மோத உள்ளது. உலக கோப்பைக்கான ICC ஆடவர் 20 ஓவர் கிரிக்கெட் போட்டித் தொடரில், அரையிறுதிப் போட்டிகள், மார்ச் 4-5 ஆகிய தேதிகளிலும், இறுதிப் போட்டி, 8ஆம் தேதியும் நடைபெறும்.

***நீதிபதி பதவி (15)***

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக நியமிக்கப் படும் எந்தவொரு நீதிபதிக்கும், பதவியில் காலியிடம் ஏற்படுவதற்கு 2 மாதம் முன்பாகவே, பணி மாறுதல் உத்தரவு பிறப்பிக்க, உயர்நிலை நீதிபதிகளின் நியமனம் தொடர்பான உச்சநீதிமன்றத்தின் கொலீஜியம் குழு, கொள்கை முடிவு எடுத்துள்ளது. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி பதவிக்கு நியமிக்கப் படும் நீதிபதி, அப்பதவியை ஏற்கும் முன்பாகவே, சம்பந்தப்பட்ட உயர்நீதிமன்றம் தொடர்பான எல்லா விவகாரங்களையும் முன்கூட்டியே அறிந்து கொள்ள ஏதுவாக, இம்முடிவு மேற்கொள்ளப் பட்டுள்ளது. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியும், கொலீஜியம் குழுவின் தலைவருமான நீதிபதி சூரியகாந்த்

தலைமையில், நேற்று நடைபெற்ற கொலீஜியம் குழுவின் கூட்டத்தில், கேரள உயர்நீதிமன்ற நீதிபதி S.A. தர்மாதிகாரி-யை, சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக நியமிக்கவும், பரிந்துரைக்கப் பட்டுள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பதவி அடுத்த மாதம் 5ஆம் தேதி காலியாகும் நிலையில், கொலீஜியம் குழுவின் இப்பரிந்துரை வெளியாகி உள்ளது.

*தர்மேந்திர பிரதான் (11)*

நீதித் துறையின் ஊழல் குறித்து NC-ERT பாடப் புத்தகத்தில், பாடம் இடம் பெற்றது துரதிஷ்ட வசமானது என்றும், பாடப் புத்தகத்தை விலக்கிக் கொள்ள NC-ERT நிர்வாகத்திற்கு அரசு அறிவுறுத்தி இருப்பதாகவும், மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார். இன்று, புதுடெல்லியில், செய்தியாளர்களிடம் பேசிய அவர், நீதித் துறையை அவமதிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை என்றும், பிரச்சனை தொடர்பான உச்ச நீதிமன்றத்தின் உத்தரவுகளை அரசு முழுமையாக பின்பற்றும் என்றும் கூறினார். பொறுப்பற்ற முறையில் இத்தகைய ஒரு பாடம், பாடப் புத்தகத்தில் இடம் பெறக் காரணமானவர்கள் மீது, நடவடிக்கை எடுக்கவும், கல்வித் துறை செயலருக்கு அறிவுறுத்தப் பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

தொழில் நுட்பங்களின் அடிப்படையிலான நிர்வாகம் போன்ற அரசின் பல்வேறு நடவடிக்கைகளால், தற்போது நாடே, **சீர்திருத்த எக்ஸ்பிரசில்** பயணித்து வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

AI தொழில் நுட்பங்களின் பாதுகாப்பு, மற்றும் **நன்னெறி அடிப்படைகள்** குறித்து, அனைத்துத் தரப்பினர் இடையே **நம்பிக்கை** முக்கியம் என்று, மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

தமிழக **சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு**, பீகாரை விட அதிகமாக சாதனை அளவில் அமையும் என்று, **தலைமைத் தேர்தல் ஆணையர்** திரு. கியானேஷ் குமார் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், **நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி** மூலம் வாங்கப் பட்டுள்ள, 2 ஆம்புலன்ஸ் வாகனங்களை, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வைத்திலிங்கம், சுகாதாரத் துறையிடம் வழங்கினார்.